120/DD/20 T.C-113

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS
# THE REVENUE TEST – PART II

(Without Books)

Maximum Time : 1 hour — Maximum Marks : 40

## *IMPORTANT INSTRUCTIONS*

## OBJECTIVE TYPE
கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**
வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

**NB : Words of masculine gender in these instructions shall, where the context so require, be taken to include feminine gender.**
இந்த அறிவுறுத்தலில் ஆண் பாலினரின் வார்த்தைகளில், சூழலுக்கேற்ப தேவைப்படின் பெண் பாலினரின் வார்த்தைகளும் அடங்கும்.

**This booklet should not be opened till the Invigilator gives a signal to open it. As soon as the signal is received you should open the booklet and then proceed to answer the questions.**
இந்த வினாத்தொகுப்பினை கண்காணிப்பாளரின் அனுமதி பெறுவதற்கு முன்னர் திறக்ககூடாது. கண்காணிப்பாளர் வினாத்தொகுப்பினை திறப்பதற்கு அனுமதி அளித்தவுடன் வினாத்தொகுப்பினை திறந்து விடையளிக்க தொடங்கலாம்.

1. This question booklet contains 40 number of objective type questions. Prior to attempting to answer, the candidate is requested to check whether all questions are there and ensure that there are no blank pages in the question booklet. In case, if any defect is noticed in the question paper, it shall be reported to the Invigilator immediately, **within first 10 minutes** after which no request will be entertained.
இவ்வினாத்தாள் 40 கொள்குறி வகை வினாக்களை கொண்டது. விண்ணப்பதாரர்கள் விடையளிக்க தொடங்கும் முன், வினாத்தாளில் எல்லா வினாக்களும் இடம் பெற்றுள்ளனவா என்பதையும், ஏதேனும் சில பக்கங்கள் / வினாக்கள் அச்சிடப்படாமல் விடுபட்டுள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். வினாத்தாளில் ஏதேனும் குறை இருப்பின் வினாத்தாளைப் பெற்ற பின் பத்து நிமிடங்களுக்குள் அறை கண்காணிப்பாளரிடம் தெரிவிக்க வேண்டும். அதற்கு பிறகு தெரிவிக்கப்படும் கோரிக்கைகள் ஏதும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

2. Answer all questions. All questions carry equal marks.
அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.

3. Candidate must write his Register Number in the space provided on the top right side of this booklet alone. Do not write anything else on the Question Booklet.

விண்ணப்பதாரரின் பதிவெண்ணை இவ்வினாத்தாளின் மேல் வலது பக்கத்தில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுத வேண்டும். வினாத்தாளில் வேறு எதையும் எழுதக் கூடாது.

4. The sheet before the last page of the question booklet shall be used for any rough work.

வினாத்தாளின் கடைசி பக்கத்திற்கு முன் பக்கத்தில் rough work எழுதி பார்க்க உபயோகித்துக் கொள்ளவும்.

5. (a) Each question comprises of four responses i.e. (A), (B), (C) and (D). Candidate shall select only one correct response. In case, if the candidate feels that there are more than one correct response, **shade the response which he considers is the best.**

(b) In any case, a candidate shall choose only one response for each question.

(c) **If more than one answer is shaded for a question, the answer will be treated as wrong and no mark will be given for that question.**

(d) The total marks will depend on the total number of correct responses marked in the OMR answer sheet. (For this purpose, only one shaded circle for a question will be taken into account for awarding mark)

(a) ஒவ்வொரு வினாவிற்கும் (A), (B), (C), (D) என நான்கு விடைகள் கொடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர் அவற்றில் ஏதேனும் ஒரு சரியான விடையைத் தேர்வு செய்ய வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு வினாவிற்கு இருப்பதாக கருதினால், **அவற்றில் எவ்விடை மிகச் சரியானது என கருதுகிறீர்களோ, அவ்விடையை நிழலிட்டு காட்ட வேண்டும்.**

(b) எவ்வாறிருப்பினும், ஒரு வினாவிற்கு ஒரே ஒரு விடையைத் தான் தேர்ந்தெடுக்க வேண்டும்.

(c) **ஒரு வினாவிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வட்டங்களில் விடையளிக்கப்பட்டிருந்தால் அவ்விடை தவறானதாக கருதப்பட்டு, அவ்வினாவிற்கு மதிப்பெண் வழங்கப்படமாட்டாது.**

(d) OMR விடைத் தாளில் குறிக்கப்பட்ட சரியான விடைகளைப் பொறுத்து, மொத்த மதிப்பெண்கள் வழங்கப்படும் (ஒரு வினாவிற்கு ஒரு வட்டத்தில் (குறிப்பிட்ட) நிழலிட்ட விடை மட்டுமே மதிப்பெண் வழங்க கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்).

6. Do not mark the answers in the Question Booklet.
வினாத்தாளில் விடைகளைக் குறிப்பிடக் கூடாது.

7. Candidate shall not remove or tear off any sheet from this question booklet. During the examination he is not allowed to take the question booklet out of the examination hall. Only after the examination is over, he shall be allowed to take the question booklet.
விண்ணப்பதாரர், வினாத்தாளின் எந்த ஒரு பக்கத்தையும், நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நடைபெறும் போது, வினாத்தாளை தேர்வு கூடத்தைவிட்டு வெளியே எடுத்து செல்ல அனுமதி கிடையாது. தேர்வு முடிந்த பின்னரே வினாத்தாளை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

8. Failure to comply with any of the above instructions will render you liable to such action or penalty as the Commission may decide.

மேற்கண்ட அறிவுரைகளில் ஏதேனும் மீறப்படுமேயானால் தேர்வாணையம் எடுக்கும் தண்டனை / நடவடிக்கைக்கு உள்ளாக நேரிடும்.

9. In case of doubt, English version is the final.
வினாக்களில் சந்தேகமிருப்பின், ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

1. Which account the Adangal relates?

(A) Village Account No. 2
(B) Village Account No. 6
(C) Village Account No. 7
(D) Village Account No. 10(1)

அடங்கல் எந்த கணக்கினைச் சார்ந்தது?

(A) கிராமக் கணக்கு எண். 2
(B) கிராமக் கணக்கு எண். 6
(C) கிராமக் கணக்கு எண். 7
(D) கிராமக் கணக்கு எண். 10(1)

2. "2C" patta issued by whom?

(A) District Collector
(B) Revenue Divisional Officer
(C) Village Administrative Officer
(D) Tahsildar

"2சி" பட்டா யாரால் வழங்கப்படுகிறது?

(A) மாவட்ட ஆட்சியர்
(B) வருவாய் கோட்ட அலுவலர்
(C) கிராம நிர்வாக அலுவலர்
(D) வட்டாட்சியர்

3. Jamabandhi conducted to settle the Village and Taluk Accounts. Is it correct?

(A) Not correct
(B) Correct
(C) Partly correct
(D) Review of the Collector

கிராம மற்றும் வட்டக் கணக்குகளை முடிப்பதற்காகத்தான் ஜமாபந்தி நடத்தப்படுகிறது.. இது சரியா?

(A) சரியல்ல
(B) சரி
(C) பகுதி சரியானது
(D) மாவட்ட ஆட்சியரின் ஆய்வு

4. In what way the collection of Land Revenue is done in the village?

(A) By News Paper (B) Alerting Pattadars

(C) Issuing kist receipt (No.18) (D) Sending report to Tahsildar

கிராமத்தில் நிலவரி எந்த வழியில் வசூலிக்கப்படுகிறது?

(A) செய்தித் தாட்களின் வாயிலாக (B) பட்டாதாரர்களை அறிவுறுத்தி

(C) கிஸ்து ரசீது (எண்.18) வழங்கி (D) வட்டாட்சியருக்கு அறிக்கை அனுப்பி

5. On what date the Village Administrative Officer has to submit Birth and death returns to the Tahsildar?

(A) First date of every month

(B) Every year December 31st

(C) Once in three months

(D) On 5th of every month

கிராம நிர்வாக அலுவலர் எந்த தேதியில் பிறப்பு இறப்பு அறிக்கைகளை வட்டாட்சியருக்கு அனுப்ப வேண்டும்?

(A) ஒவ்வொரு மாதத்தின் முதல் நாள்

(B) ஒவ்வொரு ஆண்டின் டிசம்பர் 31ம் நாள்

(C) மூன்று மாதங்களுக்கு ஒரு முறை

(D) ஒவ்வொரு மாதமும் 5ம் நாள்

6. Permanent changes of patta are to be entered in which register of the village?

(A) Village Register 'A'
(B) Village account No. 6
(C) Village Account No. 12
(D) Village Account No. 2A

நிரந்தர பட்டா மாறுதல் விபரங்கள் எந்த கிராமப் பதிவேட்டில் பதிவு செய்யப்படுகின்றன?

(A) கிராமப் பதிவேடு "அ"
(B) கிராமக் கணக்கு எண். 6
(C) கிராமக் கணக்கு எண். 12
(D) கிராமக் கணக்கு எண். 2ஏ

7. Village account No. 20 deals about

(A) Irrigation
(B) Rainfall account
(C) Azmoish
(D) Birth and death

கிராமக் கணக்கு எண். 20 எதைக் குறிக்கிறது?

(A) பாசனம்
(B) மழையளவு கணக்கு
(C) பயிராய்வு
(D) பிறப்பு மற்றும் இறப்பு

8. What is Taluk Account No. 4?

(A) Jamabandhi account
(B) Collection account
(C) Dharkast
(D) Chitta

வட்டக் கணக்கு எண். 4 என்பது என்ன?

(A) ஜமாபந்தி கணக்கு
(B) வசூல் கணக்கு
(C) தர்க்காஸ்து
(D) சிட்டா

9. Bought-in-lands are not allowed to encroach. Is it correct?

(A) Owner of the land can encroach

(B) Not correct

(C) Used for Government purpose

(D) Correct

நில ஏல தரிசு நிலங்கள் ஆக்கிரமிப்பு செய்ய அனுமதிக்கப்படுவதில்லை. சரியா?

(A) நில உரிமையாளர் ஆக்கிரமிக்கலாம்

(B) சரியல்ல

(C) அரசின் பயன்பாட்டிற்காக

(D) சரியே

10. An agriculturist taking water and irrigating his lands without permission. State how his action is treated

(A) Treated as ayacutdar

(B) Will be reckoned

(C) Village cultivator

(D) Treated as irregular irrigation

அரசு பாசன ஆதாரங்களிலிருந்து தனது நிலத்திற்கு அனுமதியின்றி பாசனம் செய்யும் விவசாயியின் செயல் எவ்வாறு கருதப்படும்?

(A) ஆயக்கட்டுதாரர் என

(B) பின்னர் ஏற்றுக் கொள்ளப்படும்

(C) கிராம விவசாயி என

(D) முறையற்ற பாசனம் என

11. Basis on Adangal, which account is maintained for the Pattawar demand?

(A) Account No. 2A

(B) Account No. 10 II

(C) Account No. 6

(D) Account No. 12

அடங்கல் கணக்கைச் சார்ந்துள்ள கிராமக் கணக்குகளில் எந்த கணக்கு பட்டாவாரியான கேட்பு எனப்படுகிறது?

(A) கணக்கு எண். 2எ

(B) கணக்கு எண். 10(II)

(C) கணக்கு எண். 6

(D) கணக்கு எண். 12

12. Which account is called as the mother of Village account?

(A) Village Account No. 2

(B) Village Account No. 4

(C) Village Account No. 10(1)

(D) Village Account No. 8A

கிராமக் கணக்குகளின் தாய் என அழைக்கப்படும் கணக்கு எது?

(A) கிராமக் கணக்கு எண். 2

(B) கிராமக் கணக்கு எண். 4

(C) கிராமக் கணக்கு எண். 10(1)

(D) கிராமக் கணக்கு எண். 8எ

13. How the lands in which Archealogical Monuments are treated?

(A) Sold in Public Auction

(B) Leased out to Public

(C) Prohibited for assignment

(D) Cultivation lands

தொல்லியல் நினைவுச் சின்னங்கள் உள்ள நிலங்கள் எவ்வாறு பராமரிக்கப்படுகின்றன?

(A) பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படுகின்றன

(B) பொதுமக்களுக்கு குத்தகைக்கு விடப்படுகின்றன

(C) ஒப்படை செய்ய இயலாதவை

(D) பயிரிடத்தக்க நிலங்களாக

14. Pattadars relinquish their land to Government. In which Account the application for such case is registered?

(A) Entered in Taluk Register No. 5

(B) Entered in Taluk Register No. 12

(C) Entered in Taluk Register No.8A

(D) Entered in Taluk Register No. 28

பட்டாதாரர்கள் அவர்களது நிலங்களின் உரிமையை அரசுக்கு விட்டுவிடலாம். இதற்கான விண்ணப்பம் எந்தப் பதிவேட்டில் பதிவு செய்யப்படுகிறது?

(A) வட்டப் பதிவேடு எண். 5

(B) வட்டப் பதிவேடு எண். 12

(C) வட்டப் பதிவேடு எண். 8ஏ

(D) வட்டப் பதிவேடு எண். 28

15. On what reason the alienated land to charitable institutions can be resumed to Government?

(A) Violation of conditions

(B) Sold the lands to others

(C) Not utilising the required purpose

(D) Receiving funds from terrorists

எந்த காரணத்திற்காக அற நிலையங்களுக்கு உரிமை வழங்கிய நிலங்கள் திரும்ப எடுத்துக் கொள்ளப்படுகின்றன?

(A) நிபந்தனைகளை மீறியதற்காக

(B) மற்றவர்களுக்கு நிலங்களை விற்பனை செய்தால்

(C) பெற்ற காரணத்திற்காக பயன்படுத்தாதது

(D) பயங்கரவாதிகளிடமிருந்து நன்கொடை பெற்றால்

16. Under what rule the Care-taker of the Cattle Pound collects fine from the Cattle Owner?

(A) Under Land Revenue Rules (B) Under Revenue Recovery Act

(C) Under Rules of Village Account (D) Under Special Funds Rules

எந்த விதியின் கீழ் கால்நடைப் பட்டி பாதுகாவலர் கால்நடை உரிமையாளரிடமிருந்து அபராதம் வசூலிக்கிறார்?

(A) நிலவரி விதிகளின்படி (B) வருவாய் வசூல் சட்டப்படி

(C) கிராமக் கணக்குகள் விதிப்படி (D) தனி நிதி விதித் தொகுப்பின் படி

17. Who is responsible to report the arrears written off to the Tahsildar?

(A) Village Administrative Officer (B) Revenue Inspector

(C) Care- taker of Cattle Pound (D) Village Assistant

வசூலிக்க இயலாத தள்ளுபடி செய்யப்படும் இனங்கள் குறித்த அறிக்கை வட்டாட்சியருக்கு அனுப்பப்பட வேண்டிய பொறுப்பு அலுவலர் யார்?

(A) கிராம நிர்வாக அலுவலர் (B) வருவாய் ஆய்வாளர்

(C) கால்நடைப் பட்டி பாதுகாவலர் (D) கிராம உதவியாளர்

18. In No. 7 notice issued under Encroachment Act, the time limit should be specified. Is it correct?

(A) Not necessary

(B) Let to the decision of the encroacher

(C) Correct

(D) After getting prior permission from Tahsildar

நில ஆக்கிரமிப்பு சட்டம் பிரிவு 7ன் கீழ் வழங்கப்படும் அறிவிப்பில் காலவரை சரியாக நிர்ணயிக்கப்பட வேண்டும் என்பது சரியா?

(A) தேவையில்லை

(B) ஆக்கிரமிப்புதாரரின் விருப்பம்

(C) சரியே

(D) வட்டாட்சியரின் முன் அனுமதி பெற்ற பின்னர்

19. Which account is useful in preparing Annual Account (Jamabandhi)?

(A) Taluk Account No. 8A

(B) Village Account No. 6 and 6A

(C) Taluk Account No. 12

(D) Taluk Account No. 18

எந்த கணக்கு வருடாந்திர கணக்கு (ஜமாபந்தி) தயாரிக்க உதவுகிறது?

(A) வட்டக் கணக்கு எண். 8ஏ

(B) கிராமக் கணக்கு எண். 6 மற்றும் 6ஏ

(C) வட்டக் கணக்கு எண். 12

(D) வட்டக் கணக்கு எண். 18

20. Who is registering the Birth and Death in Village Panchayat?

(A) President of Panchayat

(B) Village Administrative Officer

(C) Revenue Inspector

(D) Zonal Deputy Tahsildar

ஊராட்சிப் பகுதிகளிலுள்ள கிராமங்களில் பிறப்பு மற்றும் இறப்புகளைப் பதிவு செய்யும் அலுவலர் யார்?

(A) கிராம ஊராட்சித் தலைவர்

(B) கிராம நிர்வாக அலுவலர்

(C) வருவாய் ஆய்வாளர்

(D) மண்டல துணை வட்டாட்சியர்

21. Is 2C Patta essential and to whom?

(A) Yes. Essential to the persons who is having authorised enjoyment to the fruit bearing trees in a village

(B) Persons who serves in Navy

(C) Persons who is living in abroad

(D) Persons who is doing business

2சி பட்டா அவசியமானதா? யாருக்கு?

(A) ஆம். அவசியமானது. கிராமத்தில் பலன் தரும் மரங்களின் அங்கீகாரம் பெற்று அனுபவிப்போருக்கு 2சி பட்டா அவசியமானதாகும்

(B) கடற்படையில் பணி புரிவோருக்கு

(C) வெளிநாட்டில் வசிப்போருக்கு

(D) வியாபாரம் செய்வோருக்கு

22. What is Encroachment?

(A) Tresspassing in others lands

(B) Construction of building in others lands

(C) Unauthorised occupation in patta lands

(D) Unauthorised occupation of Government Land is called as Encroachment

ஆக்கிரமிப்பு என்றால் என்ன?

(A) மற்றவர் நிலங்களில் உள் நுழைவது

(B) மற்றவர் நிலங்களில் கட்டடங்கள் கட்டுவது

(C) பட்டா நிலங்களில் அனுமதியின்றி அனுபவிப்பது

(D) அரசு நிலங்களை அனுமதியின்றி அனுபவிப்பது ஆக்கிரமிப்பு எனப்படும்

23. Who is maintaining the Register of Inam Lands?

(A) Two copies of Register of Inam Lands were prepared and one is maintained in the Village and the other is maintained in the Taluk Office

(B) Sub Registrar

(C) Revenue Divisional Officer

(D) Revenue Inspector

இனாம் நிலங்கள் குறித்த பதிவேடு யாரால் பராமரிக்கப்படுகிறது?

(A) இனாம் நிலங்கள் குறித்த பதிவேடு இரண்டு நகல்கள் தயாரிக்கப்பட்டு, ஒரு நகல் கிராமத்திலும் மற்றொரு நகல் வட்ட அலுவலகத்திலும் பராமரிக்கப்படுகிறது

(B) சார்பதிவாளர்

(C) வருவாய் கோட்ட அலுவலர்

(D) வருவாய் ஆய்வாளர்

24. What is Conditional assignment?

(A) To assess the work of Village Administrative Officer

(B) Assignment is given with some conditions is called Conditional Assignment

(C) To assess the work of the Revenue Inspector

(D) To assess the work of the Tahsildar

நிபந்தனை ஒப்படை என்றால் என்ன?

(A) கிராம நிர்வாக அலுவலரின் பணிகளை ஆய்வு செய்தல்

(B) சில நிபந்தனைகளுடன் கூடிய ஒப்படை நிபந்தனை ஒப்படை எனப்படும்

(C) வருவாய் ஆய்வாளரின் பணிகளை ஆய்வு செய்தல்

(D) வட்டாட்சியரின் பணிகளை ஆய்வு செய்தல்

25. What is Natham?

(A) A village in Dindigul District

(B) Natham is a Government poromboke Lands and the Natham has been allotted to the houseless poor to construct a residential house

(C) Rain Gauge

(D) An equipment measuring the lands

நத்தம் என்றால் என்ன?

(A) திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமம்

(B) நத்தம் என்பது அரசு புறம்போக்கு நிலமாகும். வீடில்லாத ஏழைகளுக்கு வீடுகள் கட்டிக் கொள்ள வழங்கப்படுவதாகும்

(C) மழைமானி

(D) நிலங்களை அளக்கப் பயன்படும் ஒரு வகை கருவி

26. What is Transfer of Registry?

(A) A procedure is followed to effect transfer of the names based on a valid document

(B) A land acquired by Government

(C) A kind of travelling allowance

(D) A vehicle

பட்டா மாற்றம் என்றால் என்ன?

(A) ஒரு தகுதியான ஆவணம் மூலம் நில உரிமைகளில் கண்டுள்ள பெயர்களை மாற்றம் செய்யும் நடைமுறையாகும்

(B) அரசால் ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலம்

(C) ஒரு வகையான பயணப் படி

(D) ஒரு வாகனம்

27. Is the Village Administrative officer can make changes in the Village 'A' Register?

(A) Yes

(B) Yes. With the permission of Revenue Divisional Officer

(C) In case of Patta transfers

(D) No

கிராம "அ" பதிவேட்டில் கிராம நிர்வாக அலுவலர் மாற்றங்கள் செய்ய இயலுமா?

(A) இயலும்

(B) வருவாய் கோட்ட அலுவலரின் அனுமதியுடன் இயலும்

(C) பட்டா மாறுதல் இனங்களில்

(D) இயலாது

28. What is Land Acquisition?

(A) If the patta lands has required for an important Government purpose the lands are acquired by the guidelines given in the respective Land Acquisition Act

(B) The lands which are taken possession by the pattadar is called Land Acquisition

(C) The lands leading to seashore are taken by private companies

(D) The lands that are disturbing public thoroughfare

நில எடுப்பு என்பது என்ன?

(A) பட்டா நிலங்கள் அரசின் முக்கிய பணிக்காக தேவைப்படின் அந்நிலங்களை உரிய நில எடுப்புச் சட்டத்தின் கீழ் கையகப்படுத்துவது நில எடுப்பாகும்

(B) நில உடமைதாரரால் அபகரிக்கப்பட்ட நிலங்கள்

(C) கடற்கரையை நோக்கி செல்லும் பாதையில் உள்ள தனியாரால் எடுத்துக் கொள்ளப்பட்ட நிலங்கள்

(D) பொதுப் பாதைகளுக்கு இடைஞ்சலாக உள்ள நிலங்கள்

29. Who is maintaining the "Register showing the penalty levied on arrears of Land Revenue"?

(A) Tahsildar

(B) Revenue Divisional Officer

(C) Zonal Deputy Tahsildar

(D) Village Administrative Officer

நிலுவை நில வரியின் மேல் விதிக்கப்படும் அபராதத் தொகை குறித்த பதிவேடுகளை பராமரிப்பவர் யார்?

(A) வட்டாட்சியர்

(B) வருவாய் கோட்ட அலுவலர்

(C) மண்டல துணை வட்டாட்சியர்

(D) கிராம நிர்வாக அலுவலர்

30. What is Azmoish?

(A) Collector conducting meeting in Taluk Office

(B) Public Works Department's review

(C) A verification made regarding the extent of lands and the details of the crops with reference to the village records is called Azmoish

(D) Highways departments work

பயிராய்வு என்றால் என்ன?

(A) வட்டாட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியரால் செய்யப்படும் ஆய்வு

(B) பொதுப்பணித்துறையின் ஆய்வு

(C) நிலங்களின் பரப்பு மற்றும் அந்நிலங்களில் பயிரிடப்படும் பயிர்கள் ஆகியவைகளை கிராம ஆவணங்களின் அடிப்படையில் சரிபார்ப்பது பயிராய்வு எனப்படும்

(D) நெடுஞ்சாலைத் துறையினரின் பணி

31. What is Account No.2?

(A) Passbook of a Pattadar

(B) Account No. 2 is Adangal

(C) Land Revenue Account

(D) Family details of a pattadar

கணக்கு எண். 2 என்றால் என்ன?

(A) பட்டாதாரின் பாஸ் புத்தகம்

(B) கணக்கு எண்.2 என்பது அடங்கல் ஆகும்

(C) நில வரி கணக்கு

(D) பட்டாதாரரின் குடும்ப விபரங்கள் அடங்கிய ஆவணம்

32. What is account No.12?

(A) The account No.12 shows the entire land revenue in all sources in a village

(B) Jamabandhi Check memo

(C) Shows the irrigation sources in the village

(D) Show the mining licence in the village

கணக்கு எண். 12 என்றால் என்ன?

(A) கிராமத்தில் அனைத்து இனங்களில் இருந்தும் வரப்பெறும் நிலவரியைக் குறிப்பிடும் பதிவேடாகும்

(B) ஜமாபந்தி செக் மெமொ

(C) கிராமத்தில் உள்ள நீராதாரங்களை காட்டும் பதிவேடு

(D) கிராமத்தில் உள்ள கனிம வள உரிமங்களைக் காட்டும் பதிவேடு

33. What is Account No. 14C?

(A) The account which shows the details of lands irrigated

(B) An account showing the excess collection from land revenue from the pattadars

(C) Penalty levied from the defaulter of land revenue

(D) Details showing the poromboke lands in the village

கணக்கு எண். 14சி என்றால் என்ன?

(A) பாசன நிலங்கள் குறித்த கணக்கு

(B) நில உடமையாளர்களிடம் இருந்து வசூலிக்கப்படும் அதிக நில வரியைக் குறிப்பிடப்படும் பதிவேடு ஆகும்

(C) நிலவரி செலுத்தாத நபர்களிடம் வசூலிக்க வேண்டிய அபராத விபரங்கள் கொண்டுள்ள கணக்கு

(D) கிராமத்தில் உள்ள புறம்போக்கு நிலங்கள் குறித்த கணக்கு

34. Who is the competent authority in Treasure Trove Act?

(A) Commissioner of Revenue Administration

(B) Director of Archeology

(C) District Collector

(D) Tahsildar

புதையல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க உரிய அலுவலர் யார்?

(A) வருவாய் நிர்வாக ஆணையர்

(B) தொல்லியல் துறை இயக்குநர்

(C) மாவட்ட ஆட்சித் தலைவர்

(D) வட்டாட்சியர்

35. Who is the eligible person to get Land Assignment?

(A) Private companies

(B) Bank Employees

(C) A landless agricultural labour is eligible to get Land Assignment

(D) Rich persons

நில ஒப்படை பெறத் தகுதியானவர் யார்?

(A) தனியார் நிறுவனங்கள்

(B) வங்கி பணியாளர்கள்

(C) நிலமில்லாத வேளாண் தொழிலாளர்கள் நில ஒப்படைக்குத் தகுதியானவர்கள்

(D) வசதி படைத்தோர்

36. What is Taluk Account No. 12?

(A) Taluk Account No. 12 is showing the consolidated total land revenue from all villages

(B) Showing the irrigation sources

(C) Penalty levied on 2C tax

(D) Tahsildar's inspection report

வட்ட கணக்கு எண். 12 என்றால் என்ன?

(A) அனைத்து கிராமங்களின் நில வரியை நிர்ணயித்து காட்டும் விபரங்கள் கொண்டது வட்டக் கணக்கு எண். 12 ஆகும்

(B) பாசன ஆதாரங்களைக் காட்டும் கணக்கு

(C) 2சி வரியின் மீது வசூலிக்கப்படும் அபராதம் குறித்த கணக்கு

(D) வட்டாட்சியரின் தணிக்கைக் குறிப்பு

37. What is Taluk 8A Register?

(A) A register showing the remarks of the Jamabandhi Officer

(B) A register showing the details of sub division of lands

(C) A register showing the details of phone number of the Surveyors

(D) A register showing the collection of land revenue

வட்ட 8ஏ கணக்கு என்றால் என்ன?

(A) ஜமாபந்தி அலுவலரின் குறிப்புகளைக் காட்டும் பதிவேடு

(B) நிலங்களை உட்பிரிவு செய்யப்படும் விபரங்களை காட்டுவது வட்ட 8ஏ பதிவேடாகும்

(C) உள் வட்ட அளவர்களின் தொலைபேசி எண்களைக் குறிக்கும் பதிவேடு

(D) நிலவரி வசூலைக் காட்டும் பதிவேடு

38. Specify the important duty of a Revenue Inspector from the following

(A) Inspection of all encroachments

(B) V.I.P. Visit duty

(C) Collection of Land Revenue

(D) Maintenance of Personal Register

கீழ்வருவனவற்றில் எது நில வருவாய் ஆய்வாளரின் முக்கிய பணியாகும்?

(A) அனைத்து ஆக்கிரமிப்புகளையும் தணிக்கை செய்தல்

(B) முக்கிய பிரமுகர்கள் வருகைப் பணி

(C) நிலவரி வசூல்

(D) தன் பதிவேடு பராமரித்தல்

39. Which poromboke is allotted for dwelling purpose?

(A) Natham (B) Canal

(C) Road (D) Mayanam

கீழ்வருபவற்றில் எந்த புறம்போக்கு குடியிருப்பிற்கு வழங்க ஏதுவானதாகும்?

(A) நத்தம் (B) வாய்க்கால்

(C) பாதை (D) மயானம்

40. What is Jamabandhi?

(A) A meeting of all Jamabandhi Officers

(B) Settlement of village accounts in a fasli is called Jamabandhi

(C) A meeting conducted by the Collector

(D) Review of the Revenue Divisional Officer

ஜமாபந்தி என்றால் என்ன?

(A) அனைத்து ஜமாபந்தி அலுவலர்களின் கூட்டம்

(B) பசலியின் முடிவில் கிராமக் கணக்குகளின் சரிபார்ப்பு மற்றும் தீர்வு ஆகியவை ஜமாபந்தி எனப்படும்

(C) மாவட்ட ஆட்சித் தலைவரால் நடத்தப்படும் கூட்டம்

(D) வருவாய் கோட்ட அலுவலரின் ஆய்வு

**120/DD/20**

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS
# THE REVENUE TEST — PART – II

(With Books)

Maximum Time : 1.30 hours Maximum Marks : 60

## ***IMPORTANT INSTRUCTIONS***

## DESCRIPTIVE TYPE
## விரிவான விடையளிக்கும் வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

1. Answers in excess of the prescribed number of questions appearing at the end of the answer book will not be valued.

   விடைகளை குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைக்கு அதிகமாக எழுதியிருப்பின், விடைத்தாளின் இறுதியில் உள்ள அதிக எண்ணிக்கையிலான விடைகள் மதிப்பீடு செய்யப்படாது.

2. Answer should be in brief and to the point and need not be a verbatim reproduction of printed pages. (Applicable for tests to be answered "with books" only).

   விடைகள் சுருக்கமாகவும், வினாவிற்கு உரிய அளவிலும் இருக்க வேண்டும். புத்தகத்தில் உள்ளவற்றை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை திரும்ப எழுதக் கூடாது. (இக்குறிப்பு புத்தகங்களுடன் எழுதும் தேர்விற்கு மட்டும் பொருந்தும்)

3. In case of doubt, English version is the final.

   வினாக்களில் சந்தேகமிருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

[Turn over

I. **Answer any EIGHT of the following questions.**

பின்வரும் ஏதாவது எட்டு வினாக்களுக்கு விடையளிக்கவும். **(8 × 3 = 24)**

1. Explain the Annual Register of Mines.

   ஆண்டு கனிமப் பதிவேடு – விவரி.

2. Explain 2C Patta.

   2சி பட்டா – விவரி.

3. What is Reliquishment?

   உரிமை விட்டு விடுதல் என்றால் என்ன?

4. Under what circumstances Patta transfer are ordered?

   எந்த சூழ்நிலையில் பட்டா மாறுதல் உத்திரவிடப்படுகிறது?

5. Explain the Form of Patta granted to each ryots.

   எந்த படிவத்தில் விவசாயிகளுக்கு பட்டா வழங்கப்படுகிறது?

6. Explain the irrigation cess.

   பாசன மேல் வரி – விவரி.

7. Explain the Taluk Account No. 18A.

   வட்டக் கணக்கு எண். 18ஏ – விவரி.

8. Describe the Rainfall Account.

   மழையளவு கணக்கு பற்றிய சிறு குறிப்பு வரைக.

9. Describe the Taluk Account No. 14.

வட்டக் கணக்கு எண். 14 – விவரி.

10. Explain Azmoish shortly.

பயிராய்வு பற்றி சுருக்கமாக விவரிக்கவும்.

**II. Answer any THREE of the following questions.**

பின்வரும் ஏதாவது மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும். **(3 × 5 = 15)**

1. Describe the Prohibitary Order Book.

தடையாணைப் புத்தகம் – விவரி.

2. Describe Taluk Account No. 12.

வட்டக் கணக்கு எண். 12 – விவரி.

3. Describe the actions of Ayacutdars which are treated as Irregular Irrigation.

எந்தெந்த வகையானவை ஆயக்கட்டுதாரர்களின் முறையற்ற பாசனம் எனக் கருதப்படுகிறது?

4. What is "G" Return?

"ஜி" விவர அறிக்கை என்றால் என்ன?

5. What are the Statistical Return submitted by the Tahsildar?

வட்டாட்சியரால் சமர்ப்பிக்கப்படும் புள்ளி விபர அறிக்கைகள் எவை?

**III. Answer any THREE of the following questions.**

பின்வரும் வினாக்களில் ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும். **(3 × 7 = 21)**

1. Explain Annual Jamabandhi Return.

வருவாய்த் தீர்வாய ஆண்டறிக்கை – விவரி.

2. Explain the brief description of the various collection accounts maintained in the Village.

கிராமத்தில் பராமரிக்கப்படும் வசூல் கணக்குகள் குறித்த குறிப்புகள் விவரிக்கவும்.

3. Describe the actions to be taken under Tamilnadu Revenue Recovery Act.

தமிழ்நாடு வருவாய் வசூல் சட்டத்தின் படி எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவரிக்கவும்.

4. Describe about the Firka Register of Forecast Crops and explain its importance.

பிர்க்கா பயிர் முன்னறிவிப்புப் பதிவேடு குறித்தும் அதன் முக்கியத்துவம் குறித்தும் விளக்கவும்.

5. Explain briefly how the Register of Birth and Deaths and the Register of Cattle deceases maintained in the village.

கிராமத்தில் பிறப்பு இறப்பு பதிவேடு மற்றும் கால்நடை வியாதிகள் குறித்த பதிவேடும் எவ்வாறு பராமரிக்கப்படுகிறது?

---